DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
MC 13/2020

Deposition of PW 1 cross examined Dt. 03.05.2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அகிலா | Caste | : | |
| Husband Name | : | நாகராஜ் | Calling | : | |
| Village | : | கடலங்குடி | Religion | : | |
| Taluk | : | | Age | : | 29/2023 |

**(**Respondent present)

**<u>ம.சா.1 முதல் விசாரணை</u>**

என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ஜீவணாம்சம் கோரி தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை நீங்கள் தான் முழு புரிதலுடன் உங்கள் கணவர் மீது தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களுக்கு ம் உங்கள் கணவருக்கும் நடைபெற்ற திருமணம் பெற்றோர்களால் நிச்சியக்கப்பட்ட திருமணமா என்றால் பெற்றோர்களால் நிச்சியக்கப்பட்ட திருமணம். எந்த தேதியில் எந்த இடத்தில் திருமணம் நடைபெற்றது என்றால் 04.09.2016ம் தேதி நாகப்பட்டினம் அபிராமி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

2. திருமணத்திற்கு உங்கள் பெற்றோர் வீட்டில் இருந்து என்ன என்ன சீர்வரிசை செய்தார்கள் என்றால் 25 சவரன் பவுன் நகை, ராயல் என்பீல்டு புல்லட், கட்டில், பீரோ, டைனிங் டேபில், டிரசிங் டேபில், தையல் மிசன், மற்ற சீர்வரிசை பொருட்கள். எதிர் மனுதார் வீட்டில் இருந்து என்ன சீர்வரிசை செய்தார்கள் என்றால் பித்தளை குத்து விளக்கு இரண்டு, 5 1/2 சவரன் தாலி செயின், சேர் வாங்கி கொடுத்தார்கள். திருமணத்திற்கு பிறகு எத்தனை நாட்கள் எதிர் மனுதாரர் உடன் அவர் வீட்டில் வசித்து வந்தீர்கள் என்றால் மாமியார் வீட்டில் 6 மாதம் வசித்து வந்தேன் பிறகு சென்னைக்கு சென்று 1 வருடம் அவருடன் வசித்து வந்தேன். சென்னையில் இருக்கும் போது முதல் முதலில் கருவுற்றீர்களா என்றால் ஆமாம். கருவுற்றிருக்கும்போது விழா நடத்தினார்களா என்றால் நாகப்பட்டினத்தில் இருக்கும் போது 5 மாதத்தில் மாமியார் வீட்டிற்கு வந்து வளைகாப்பு வைத்து பிறகு அம்மா வீட்டிற்கு அழைத்து சென்றார்கள்.

3. கருவுற்ற 5 மாதங்களில் உங்கள் கணவர் உங்களை நல்ல முறையில் பார்த்து கொண்டாரா மருத்துவமனைக்கு அழைத்து சென்றாரா என்றால் பார்த்து கொண்டார், அழைத்து சென்றார். வளைகாப்பு முடிந்து அம்மா வீட்டிற்கு வந்த பிறகு மருத்துவமனைக்கு சென்றீர்களா என்றால் சென்றேன். எத்தனை முறை சென்றீர்கள் என்றால் 2 முறை சென்றோம். மருத்துவர் என்ன அறிவுரை வழங்கினார் அதை பின்பற்றினீர்களா என்றால் மருத்துவர் குழந்தை நன்றாக உள்ளது என்று சொன்னார். மருத்துமனை செல்லும்போது ஸ்கேன் எடுப்பது போன்ற செலவுகளை செய்து ஸ்கேன் எடுத்து பார்த்தீர்களா என்றால் ஸ்கேன் எடுத்து பார்த்தோம். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலமா என்றால் அப்போது இருந்தது தற்போது இல்லை.

4. அம்மா வீட்டில் இருக்கும்போது உங்கள் கணவர் மருத்துசெலவிற்கு பணம் கொடுத்தாரா

என்றால் அவர் வரவே இல்லை பணம் தரவே இல்லை ஊருக்கு போகும்போது பணம் கொடுத்தார் குழந்தைக்காக எந்த பணமும் கொடுக்கவில்லை. அம்மாவீட்டில் இருந்து 5 மாதத்தில் என்னை அழைக்க வந்த போது நான் கண்டபடி போன் பேசி வருகிறேன் என்று சொல்லி எனது மாமியார் சண்டை போட்டார், எனது கணவர் என்னை அம்மா வீட்டிற்கு போ என்று சொல்லவில்லை எதுவும் சொல்லாமல் உட்கார்ந்து இருந்தார் முறைப்படி வளையல் போட்டு என்னை அம்மா வீட்டிற்கு அழைத்து சென்றார்கள்.

5. அந்த சமயத்தில் அந்த பிரச்சனைக்கு எந்தவிதமான தீர்வு காணப்பட்டதா என்றால் இல்லை சண்டைதான் நடைபெற்றது பேசி சரிசெய்யவில்லை. எவ்வளவு நாட்கள் கழித்து கணவர் வீட்டிற்கு வந்து சேர்ந்தீர்கள் என்றால் 6 மாதம் எனது மாமியார் வந்து சண்டை நடந்து என்னை அழைத்து சென்றார். அதன் பிறகு எங்கு குடும்பம் நடத்தி வந்தீர்கள் என்றால் நாகப்பட்டினத்தில் தான் இருந்தேன். நாகப்பட்டினத்தில் இருந்து சென்னைக்கு எப்போது சென்றீர்கள் என்றால் நாகப்பட்டினத்தில் 20 நாட்கள் இருந்துவிட்டு எனது கணவருடன் சென்னைக்கு சென்றேன், அங்கு பிரச்சனை நடந்ததால் அவரே அழைத்து சென்றார். சென்னையில் 3 மாதம் கருவுற்று இருந்தபோது எனது மாமியார் மானார் என்னை பார்க்க வந்த போது சாமி போட்டோ வைத்திருந்தது சம்மந்தமாக என்னிடம் சண்டை போட்டு எனது மாமியார் மாடியில் இருந்த என்னை என் தலைமுடியை பிடித்து இழுத்து வந்து என்னை கீழே தள்ளி விட்டார்.

6. 3 மாதத்தில் உங்களை மாடி படியில் இருந்து தலை முடியை பிடித்து இழுத்து வந்து தள்ளியதாக சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமான மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. அந்த சம்பவம் சம்மந்தமாக புகார் கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. அது போல் சம்பவவே நடைபெற வில்லை நீங்கள் போன் பேசி வருவதை புகார் சொன்னதால் பொய்யாக சொல்லிகிறீர்கள் என்றால் சரியல்ல. மாடி படியில் இருந்து தலை முடியை பிடித்து இழுத்து வந்தால் உங்கள் உடல் சுகவீணம் ஏற்பட்டிருக்கும் நீங்கள் சொல்வது போல் சம்பவமே நடைபெற வில்லை என்றால் சரியல்ல. சென்னைக்கு செனற் பிறகு நீங்களும் உங்கள் கணவரும் தனிகுடித்தனம் நடத்தி வந்தீர்கள் என்றால் சரிதான். அங்கு இருக்கும்போது உங்கள் கணவர் உங்களுக்கு ஆதரவாக நடந்து கொண்டாரா என்றால் நடந்து கொண்டார்.

7. அப்போது உங்களுக்கு திடிரென்று உடல்நிலை சரியில்லமால் போனா என்றால் ஆமாம். எந்த மருத்துவமனைக்கு எப்போது சிகிச்சைக்கு போனிர்கள் என்றால் சேலையூரில் உள்ள நியூ லைப் என்ற மருத்துவமனைக்கு எனது கணவரும் எனது அண்ணனும் அழைத்து சென்றார்கள். குழந்தையின் எந்த வார வளர்ச்சியில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் 26 வது வாரத்தில் அழைத்து சென்றார்கள். மருத்துவமனையில் பரிசோதித்துவிட்டு மருத்துவர் என்ன சொன்னார்கள் என்றால் மருத்துவர் எனது கணவர் மற்றும் எனது அண்ணனுடன் பேசினார்கள் எனக்கு எதுவும் தெரியாது.

8. அதன் பிறகு என்ன விவரம் நடந்தது என்று தெரிந்து கொண்டீர்களா என்றால் எனது கணவர் என்னிடம் சொல்லவில்லை என்னிடம் நம்புகிறாயா என்று கேட்டார் எனது மாமா வை போன்

செய்து வரவைத்தார் இந்த விசியம் எனக்கு தெரியாது. அதன் பிறகு எனது மாமா சொன்ன மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றார்கள். எந்த மருத்துவமனை என்றால் சைதபேட்டேயில் உள்ள மருத்துவர் பிளோமினா என்பவரிடம் அழைத்து சென்றார். அங்கு உங்களுக்கு கரு கலைப்பு ஏற்பட்டு இறந்த குழந்தையை எடுத்தார்கள் என்றால் சரிதான். இந்த சமய்த்தில் உங்கள் பெற்றோர் உங்களுடன் இல்லை என்றால் சரிதான் அப்போது என்னுடன் இல்லை. கருகலைப்பு நடந்த பிறகு உங்கள் கணவர் உங்களை அழைத்து சென்று நல்ல முறையில் குடும்பம் நடத்தினார் என்றால் சரிதான்.

9. 29 வது வாரத்தில் தான் வயிற்றில் வலி ஏற்படவும் மருத்துவமனைக்கு சென்றீர்கள் அங்கு 23 வாரத்திலே குழந்தை இறந்துவிட்டதாக சொல்லி சிகிச்சை செய்தார்களா என்றால் சரியல்ல 26 வாரத்தில் தான் குழந்தை இறந்துவிட்டதாக சொல்லி சிகிச்சை செய்தார்கள். மருத்துவ செலவினங்கள் அனைத்தும் உங்கள் கணவர் தான் பார்த்தார் என்றால் சரிதான். கருகலைப்புக்கு பிறகு நல்ல முறையில் தான் வாழ்ந்து வந்தீர்கள் என்றால் சரிதான். அதன் பிறகு 2 வது குழந்தை பிறக்கும் வரை அம்மா வீட்டிற்கு வரவில்லை என்றால் சரிதான். இடையில் உங்கள் கணவருக்கும் கணவரின் குடும்பத்தாருக்கும் சொல்லமால் உங்கள் குடும்பத்தார் முன்னிலையில் வளைகாப்பு நடைபெற்றதா என்றால் இல்லை எல்லாரிடமும் சொல்லிவிட்டுதான் வளைகாப்பு நடைபெற்றது. அது பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல.

10. அப்போது என்ன பிரச்சனை வந்தது என்றால் எனது கணவர், அப்பா, அம்மா இல்லாமல் வளைகாப்பு செய்யக்கூடாது என்று சொன்னார் அதனால் பிரச்சனை வந்தது. அப்பா, அம்மா இல்லாமல் வளைகாப்பு செய்யக்கூடாது என்று சொல்லியும் உங்கள் மாமா உங்கள் கணவர் வீட்டில் இல்லாத சமயத்தில் தனியாக பேசிக்கொண்டிருந்தது சம்மந்தமாக பிரச்சனை நடந்தது என்றால் சரியல்ல. உங்கள் அம்மா எனது தம்பியிடம் பேசிக்கிட்டு தான் இருப்பா உனக்கு என்ன பிரச்சனை வந்தது என்று உங்கள் கணவரிடம் கேட்டாடர் என்றால் இல்லை. பிரசவ வலி ஏற்பட்டு யார் உங்களை மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றால் எனது கணவர், மாமியார், அம்மா அப்பா உடன் சேர்ந்து தாம்புரம் பெதஸ்தா மருத்துமனயில் சென்று சேர்த்தார்கள்.

11. டிஸ்சார்ஜ் செய்யும் வரை உங்கள் கணவர் உங்களை நல்லமுறையில் பார்த்து கொண்டார்கள் என்றால் சரிதான். பெதஸ்தா மருத்துமனயில் உள்ள அனைத்து செலவுகளையும் உங்கள் கணவர் தான் செய்தார் என்றால் எனது அப்பா எனது கணவரிடம் ரூ.35,000/- கொடுத்தார் எனது கணவர் வாங்கி கொள்ளவில்லை. டிஸ்சார்ஜ் ஆகி எங்கு சென்றீர்கள் என்றால் எனது கணவர் வீட்டிற்கு சென்றேன். எத்தனை மணி நேரம் இருந்தீர்கள் என்றால் 5 மணி நேரம் இருந்தேன். அங்கு என்ன நடைபெற்றது எந்த காரணத்திற்காக அம்மா வீட்டிற்கு சென்றீர்கள் என்றால் மருத்துவமனையில் இருந்து குழந்தையை எனது மாமியார் தூக்கி வந்தபோது நான் குழந்தையை பிடிங்கினேன் அதனால் அவரிடம் இருந்து நான் குழந்தையை பிடிங்கி கொண்டதாக பிரச்சனை நடைபெற்றது. பிறகு மறுபடியும் நான் வாங்கியது தப்பு என்று குழந்தையை அவரிடம் கொடுத்தேன் மோசமான வார்த்தைகளால் திட்டினார். யார் யார் வந்தார்கள் என்றால் நான் எனது அப்பா, அம்மா,

எனது கணவர், மாமியார், நாத்தனார் ஆகியோர் வந்தோம்.

12. எதனால் உங்கள் குழந்தையை தூக்கி கொண்டு வீட்டை விட்டு வெளியே சென்றீர்கள் என்றால் குழந்தையை பிடிங்கியதால் சண்டை ஏற்பட்டது அதனால் வீட்டை விட்டு வெளியே சென்றேன். உங்கள் கணவரோ அவரை சார்ந்தவரோ உங்களை வீட்டை விட்டு வெளியே போக சொல்லி சொன்னார்களா என்றால் முதலில் போக வேண்டாம் என்று தடுத்தார் பின்பு விருப்பம் இருந்தால் போக சொல்லி சொன்னார், எனது அப்பா அம்மாவை மோசமான வார்த்தைகளால் திட்டினார்கள் கேம்ப் ரோட்டில் உள்ள எனது அண்ணன் வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். அண்ணனுக்கு திருமணம் ஆகி இருந்ததா என்றால் அப்போது திருமணம் ஆக வில்லை.

13. உங்கள் கணவர் உங்கள் முதல் குழந்தை இறந்துவதிட்டதால் உங்களை போக வேண்டாம் என்று கெஞ்சினார் நீங்கள் தான் அவரை மதிக்காமல் உதாசினப்படுத்தி விட்டு சென்று விட்டீர்கள் என்றால் சரியல்ல. அண்ணன் வீட்டில் எவ்வளவு நாட்கள் இருந்தீர்கள் என்றால் 1 மாதம் இருந்தேன். அது உங்கள் அண்ண்ன வீடு இல்லை மாமா வீட்டில் தங்கி இருந்தீர்கள் என்றால் இல்லை. மருத்துமனையில் இருந்த போது டிஸ்சார்ஜ் சம்மரி ஆவணங்கள் உங்கள் மாமா கணவரை மிரட்டி பிடிங்கி சென்றாரா என்றால் இல்லை. மாமா பெயர் என்னவென்றால் மாரிமுத்து. சென்யைில் எவ்வளவு நாட்களாக குடியிருந்து வருகிறார் என்றால் 35 வருடம். அவர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் வாட்டர் சப்ளே செய்யும் கம்பெனி நடத்தி வருகிறார். அவர் குடியிருந்து வரும் முகவரி தெரியுமா என்றால் தெரியாது சிட்லபாக்கம் என்று தெரியும்.

14. நீங்க குடியிருந்த வீட்டிற்கும் உங்கள் மாமா வீட்டிற்கும் எவ்வளவு துாரம் என்றால் எனக்கு தெரியாது. உங்கள் மாமாவிடம் போன் பேசும் வழக்கம் உள்ளதா என்றால் இல்லை. அக்காவிடம் பேசுவேன். உங்களோட தொலைபேசி உரையாடலை ஆய்வு செய்தால் எத்தனை முறை மாமாவிடம் பேசியுள்ளரீர்கள் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான் அவருடைய போனில் அக்காவிடம் பேசுவேன். என்ன படித்து உள்ளீர்கள் என்றால் BBA முடித்துள்ளேன். திருமணத்திற்கு முன்பு வேலை பார்த்துள்ளீர்கள் என்றால் இல்லை. Computer course. typing course படித்துள்ளீர்களா என்றால் Computer course படித்துள்ளேன். உங்கள் கணவர் என்ன படித்துள்ளார் என்றால் B.Tech படித்துள்ளார். திருமணத்தின்போது அவர் எங்கு வேலை பார்த்தார் என்ன சம்பளம் என்று சொன்னாரா என்றால் சொன்னார், பெருங்களத்துாரில் Accenture company வேலை செய்து வந்தார்.

15. கொரான காலக்கட்டத்தில் வீட்டில் இருந்தே வேலை பார்த்து வரும் வாய்ப்பு இருந்தது என்றால் சரிதான். அதன் பிறகு அந்த நிறுவனத்தில் இருந்து ஆட்குறைப்பு செய்யும்போது உங்கள் கணவரை வேலையில் இருந்து எடுத்துவிட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மனைவி, குழந்தை, வேலை போய்விட்டதால் உங்கள் கணவர் சிறிது காலம் மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்து கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தொடர் சிகிச்சை எடுத்து கொண்டதால் Blood Pressure,. sugar, மற்றும் மனநலம் பாதிக்கப்பட்ட சிகிச்சை எடுத்து வருகிறார் என்றால் தெரியாது. குழந்தைக்கு அனைத்து நல்லது கெட்டது செய்வதற்கு அவர் தயாராக உள்ளதாக உங்களிடம்

சொல்லியுள்ளாரா என்றால் தற்போது தான் நாகப்பட்டினம் நீதிமன்றத்தில் டைவர்ஸ் கேஸ் நடந்து வரும் போது குழந்தையை மட்டும் படிக்க வைக்கிறேன் என்று சொன்னார்.

**எதிர் மனுதார் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோலுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**